முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2025 சனவரி

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2025-02-02
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலம்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரலில்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*
  (7) ***கணித அட்டவணை*** *வழங்கப்படும்.*
  (8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 01

**வரையறுக்கப்பட்ட வொன்டர் கம்பனி, பொருள் V** ஐ உற்பத்தி செய்து, அலகொன்று ரூபா 1,500/- வீதம் உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் கம்பனியின் நியமக் கிரய அட்டையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ஓர் அலகிற்கு (ரூபா)** |
|---|---|
| நேர் பொருள் **A** | 460 |
| நேர் பொருள் **B** | 315 |
| நேர் கூலி | 125 |
| மாறும் மேந்தலைகள் | 80 |

2025 ஆம் ஆண்டிற்காகப் பாதிடப்பட்ட விற்பனை 45,000 அலகுகளாக உள்ளதுடன் 2025 ஆம் ஆண்டிற்காகப் பாதிடப்பட்ட நிலையான கிரயம் ரூபா 5,616,000/- ஆகவும் உள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) இலாப – நட்டமற்ற புள்ளியை (BEP) அலகுகளில் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

2025 ஆம் ஆண்டில் விற்பனை விலையை ரூபா 1,300/- ஆகக் குறைத்தால், விற்பனை அளவை (sales volume) 60,000 அலகுகளாக அதிகரிக்கலாம் என சந்தைப்படுத்தல் அணி எதிர்வு கூறியுள்ளது.

(b) விற்பனை விலையைக் குறைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் இலாபத்தைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட ரிட்ஸ் கம்பனியின்** முகாமைத்துவக் கணக்கீட்டு அணியானது கம்பனியின் தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தை ஆராய கோரிக்கை விடுத்துள்ளது. இதன் பொருட்டு, **வரையறுக்கப்பட்ட ரிட்ஸ் கம்பனியின்** நிதிக் கூற்றுக்களில் இருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | **2024** | **2023** |
|---|---|---|
| விற்பனைகள் | 14,812,500 | 11,250,000 |
| விற்பனைக் கிரயம் | 3,912,500 | 8,437,500 |
| **மார்ச் 31 இல் :** | **2024** | **2023** |
| தொக்கு | 825,000 | 740,000 |
| வியாபார வருமதிகள் | 533,000 | 415,000 |
| வியாபார சென்மதிகள் | 762,000 | 646,500 |

2024 இல், மொத்த விற்பனையில் 40% ஆனவை கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கொள்வனவுகள் அனைத்தும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தை (நாட்களில்) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) வியாபார வருமதிகளைக் கையாள்வதற்கான இரண்டு (02) உபாயங்களை (strategies) **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட EFG கம்பனி** பொம்மைகளைத் தயாரித்து, விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகக் கம்பனி 18,000 அலகுகளை பாதிட்டிருந்த போதிலும், தற்போதைய பொருளாதார நிலைமைகள் காரணமாக 14,000 அலகுகளை மாத்திரமே அடைய முடிந்தது. 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **உண்மையானது (ரூபா) (14,000 அலகுகள்)** | **பாதிடப்பட்டது (ரூபா) (18,000 அலகுகள்)** |
|---|---|---|
| விற்பனைகள் | 5,880,000 | 7,650,000 |
| நேர் பொருள்கள் | (1,696,000) | (2,052,000) |
| நேர் கூலி | (1,480,000) | (1,710,000) |
| மாறும் உற்பத்தி மேந்தலை | (250,000) | (360,000) |
| நிலையான உற்பத்தி மேந்தலைகள் | (1,402,000) | (1,440,000) |
| நிலையான நிருவாக மற்றும் விநியோகச் செலவினங்கள் | (796,000) | (796,000) |
| **இலாபம்** | **256,000** | **1,292,000** |

ஆண்டின் ஆரம்பத்திலோ அல்லது ஆண்டின் இறுதியிலோ எவ்வித தொக்குகளும் இருக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நெகிழ்ச்சிப் பாதீட்டைத் (செயற்பாட்டுக் கூற்றைத்) **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட லீன் கம்பனி பொருள் Q1** ஐத் தயாரிப்பதுடன் அதற்கான அனைத்துப் பாகங்களையும் உள்ளக ரீதியாகவே தயாரிக்கிறது. சமீபத்தில், **வரையறுக்கப்பட்ட லீன் கம்பனி பொருள் Q1** ஐத் தயாரிக்கத் தேவையான ஒரு பாகமான **AX3** ஐ அலகொன்று ரூபா 800/- விலையில் தயாரித்து வழங்குகின்ற ஒரு முன்மொழிவுடன் ஒரு வழங்குநரான **வரையறுக்கப்பட்ட S கம்பனி, வரையறுக்கப்பட்ட லீன் கம்பனியை** அணுகியது.

தற்போது பாகம் **AX3** உள்ளக ரீதியில் தயாரிக்கப்படுவதுடன், அந்தச் செயற்பாட்டுடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :

(1) ஓர் அலகு **AX3** ஐத் தயாரிக்கத் தேவையான பொருளானது நேர் பொருளில் 300 கிராம் ஆகும். அதன் சந்தைப் பெறுமதி கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 600/- ஆகும். இந்த நேர்பொருளின் 5,000 கிலோகிராம் இருப்பு காணப்படுவதுடன், அது அண்மையில் கிலோகிராம் ஒன்று ரூபா 550/- விலையில் கொள்வனவு செய்யப்பட்டதாகும். இந்த நேர் பொருள் ஆனது பாகம் **AX3** தவிர்ந்த வேறு எந்தவொரு பாகத்தைத் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுவதில்லை. எஞ்சியிருக்கும் ஏதாவது இருப்புகளை கிலோகிராமொன்று ரூபா 300/- விலையில் விற்க முடியும் அல்லது அதே விலையில் **வரையறுக்கப்பட்ட S கம்பனிக்கு** விற்க முடியும்.

(2) **AX3** இன் அலகொன்றிற்கான நேர் கூலிக் கிரயம் ரூபா 250/- ஆகும். **AX3** ஐத் தயாரிப்பதை வெளித் தரப்பினரிடம் கையளித்தால் (வெளிமூலமிடப்பட்டால்), **AX3** இன் தயாரிப்பில் ஈடுபடும் பணியாளர்களுக்கு ரூபா 4,000,000/- இழப்பீட்டை வழங்கி, அவர்களை பணிநீக்கம் செய்ய வேண்டும்.

(3) **AX3** இன் அலகொன்றினது மாறும் உற்பத்திக் கிரயம் ரூபா 200/- ஆகும்.

(4) பாகம் **AX3** இன் வருடாந்தத் தேவை 168,000 அலகுகள் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

வருடாந்த உற்பத்தித் தேவையைக் கவனத்திற் கொண்டு, **வரையறுக்கப்பட்ட லீன் கம்பனி** பாகம் **AX3** ஐ உள்ளக ரீதியில் தயாரிக்க வேண்டுமா, இல்லையா என்பதை **மதிப்பிடுக.** *(உமது விடைக்கு ஆதரவான கணிப்பீடுகளையும் தருக).* (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட பொப்பி கம்பனி** பாரம்பரிய இனிப்புகளைத் தயாரித்து, விற்பனைக்காக சிறப்பங்காடிகளுக்கு விநியோகிப்பதுடன் வாடிக்கையாளர்களுக்கு நேரடியாகவும் விற்பனை செய்கிறது. கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன :

(1) பொருள்களின் விற்பனைக்காக சிறப்பங்காடிகளுக்கு 60 நாட்கள் கடன் காலம் வழங்கப்படுகின்ற அதே வேளை நேரடி விற்பனைகள் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. 2024 அக்டோபர் தொடக்கம் 2025 ஏப்ரல் வரையான மாதங்களுக்கான பாதிடப்பட்ட விற்பனைப் பெறுமதி பின்வருமாறு :

| | அக்-24 | நவெ-24 | டிசெ-24 | சன-25 | பெப்-25 | மார்ச்-25 | ஏப்-25 |
|---|---|---|---|---|---|---|---|
| **சிறப்பங்காடி விற்பனைகள் (ரூபா '000)** | 15,600 | 16,500 | 25,000 | 22,000 | 11,500 | 16,500 | 32,000 |
| **நேரடி விற்பனைகள் (ரூபா '000)** | 1,350 | 1,600 | 4,200 | 4,000 | 800 | 1,900 | 10,500 |

(2) தரப்பட்ட எந்த நேரத்திலும் 70% இல் விற்பனை மீதான பங்களிப்பு விகிதம் (contribution ratio) பேணப்படுகிறது.

(3) மாதமொன்றிற்கான பொருள் கிரயமானது மொத்த மாறும் கிரயத்தில் 55% ஆக உள்ளதுடன் அது நிலையான வழங்கலை உறுதி செய்வதற்காக 30 நாட்கள் முன்கூட்டியே செலுத்தப்படுகிறது.

(4) மாதமொன்றிற்கான மாறும் ஊழியர் கிரயமானது (variable staff cost) மொத்த மாறும் கிரயத்தில் 30% ஆக இருப்பதுடன் அது அடுத்துவரும் மாதத்தில் செலுத்தப்படுகிறது. மாறும் கூலிக் கிரயத்தைத் தவிர, நிலையான மாதாந்தச் சம்பளமாக ஊழியர்களுக்கு மாதமொன்றிற்கு ரூபா 2,500,000/- செலுத்தப்படுகிறது.

(5) மாதமொன்றிற்கான ஏனைய மாறும் செலவினங்கள், மொத்த மாறும் கிரயத்தில் 15% ஆக இருப்பதுடன் அது அந்தந்த மாதத்திலேயே செலுத்தப்படுகின்றன.

(6) மாதமொன்றிற்கான நிலையான செலவினங்கள் ரூபா 4,100,000/- ஆக இருக்குமென மதிப்பிடப் பட்டுள்ளதுடன் அது அடுத்துவரும் மாதத்தில் செலுத்தப்படுகின்றன.

(7) 2025 சனவரி 01 இல் காசு மீதி ரூபா 8,000,000/- ஆக இருந்தது.

(8) ஏதாவது மிகையான காசு, ஆண்டிற்கு 3% வட்டியைச் சம்பாதிக்கின்ற சேமிப்புக் கணக்கு ஒன்றில் வைத்திருக்கப்படும். வட்டியானது உரிய மாதத் தொடக்கத்தில் உள்ள ஆரம்ப மீதியின் அடிப்படையில் கணிப்பிடப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2025 சனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட பொட் கம்பனியானது** தேநீர்க் கோப்பைத் தொகுதிகள் மற்றும் உணவு பரிமாறும் தொகுதிகள் போன்ற கைமுறையாகச் செய்யப்படும் மட்பாண்டப் பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. இங்கு 4 பிரதான வடிவமைப்புகள் உள்ளதுடன், பொருள்களின் நியமக் கிரய அட்டையில் இருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| | ரூபா (அலகொன்றிற்கு) | | | |
|---|---|---|---|---|
| | **TP 1** | **TP 2** | **DS 1** | **DS 2** |
| விற்பனை விலை | 25,000 | 30,000 | 70,000 | 90,000 |
| களிமண் (ஒரு கிலோகிராமிற்கு ரூபா 6,000/-) | 6,000 | 6,000 | 18,000 | 15,000 |
| வர்ணப்பூச்சு (ஒரு லீற்றர் ரூபா 15,000/-) | 3,000 | 4,500 | 11,250 | 12,750 |
| நேர் கூலி (ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 800/-) | 3,200 | 4,800 | 8,000 | 12,000 |
| சூளைக்கான (Oven) கிரயம் (ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 400/-) | 800 | 1,000 | 1,800 | 2,200 |
| ஏனைய மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 1,000 | 1,500 | 2,500 | 3,750 |
| மாதமொன்றிற்காகப் பாதிடப்பட்ட விற்பனை அலகுகள் (அலகுகளில்) | 500 | 300 | 250 | 150 |

அடுத்த மாதத்திற்கு 1,950 கிலோகிராம் களிமண் கிடைக்கத்தக்கதாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ள அதேவேளை கிடைக்கத்தக்கதாக உள்ள நேர் கூலி, 8,000 மணித்தியாலங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கணிப்பீடுகளின் உதவியுடன் வரையறைக் காரணி / காரணிகளை (limiting factor/s) **அடையாளங் காண்க.** (04 புள்ளிகள்)

(b) இனங்காணப்பட்ட வரையறைக் காரணி / காரணிகளின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையைக் (optimal production mix) **கணிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**கியூக்ஷி பீ.எல்.சீ.** என்பது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனி ஆகும். கீழ்வரும் தகவல்கள் **கியூக்ஷி பீ.எல்.சீ.** இன் ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

(1) **கியூக்ஷி பீ.எல்.சீ.** 65 மில்லியன் சாதாரண வாக்குரிமைப் பங்குகளை விநியோகத்தில் கொண்டிருப் பதுடன் அது ஆரம்பத்தில் பங்கொன்று ரூபா 20/- என்ற விலையில் விநியோகிக்கப்பட்டது. தற்போது பங்கொன்று ரூபா 7.50 என்ற விலையில் பங்குகள் வியாபாரம் செய்யப்படுகின்றன. கம்பனி பங்கொன்றிற்கு ரூபா 1.35 என்ற அடிப்படையில் பங்கிலாபத்தைச் செலுத்துகிறது.

(2) கம்பனியானது தனிச்சமொன்று ரூபா 100/- விலையில், ஆண்டிற்கு 19% கூப்பன் வீதமொன்றில் 4 மில்லியன் மீட்கத்தக்க தனிச்சங்களை வழங்கியுள்ளது. தனிச்சம் ஒன்றின் தற்போதைய சந்தை விலை ரூபா 110/- ஆக உள்ளதுடன் அவை 5 ஆண்டுகளில் மீட்கப்படும்.

(3) **கியூக்ஷி பீ.எல்.சீ.** தனது உற்பத்திக் கொள்ளளவை அதிகரிப்பதற்காக ரூபா 500 மில்லியன் செலவில் விரிவாக்கல் செயற்றிடம் ஒன்றைத் திட்டமிடுகிறது.

*(வருமான வரி வீதத்தை 30% ஆகக் கொள்க.)*

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பின்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) சாதாரண பங்குகளின் கிரயம். (02 புள்ளிகள்)

(b) மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயம். (03 புள்ளிகள்)

(c) சந்தைப் பெறுமதியைப் பயன்படுத்தி, நிறையேற்றப்பட்ட சராசரி மூலதனக் கிரயம் (WACC) (03 புள்ளிகள்)

(d) **கியூக்ஷி பீ.எல்.சீ.** நீண்ட கால நிதியிடல் மூலத்தைத் (funding source) தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு (02) காரணிகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட நோவா இலத்திரனியல் கம்பனி** ஒரு வகையான இலத்திரனியல் உபகரணங்களைத் தயாரித்து விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. **வரையறுக்கப்பட்ட நோவா இலத்திரனியல் கம்பனி** ஒரு புதிய இயந்திரத்தைப் பயன்படுத்தி, சூரிய படலங்களை (solar panel) நிறுவுவதற்கான ஒரு புதிய "இலத்திரனியல் மானியை" தயாரிப்பது பற்றிக் கவனம் செலுத்துகிறது.

புதிய இயந்திரத்தின் கிரயம் ரூபா 80 மில்லியனாகவும் அதன் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் தொழிற்படு மூலதன முதலீடு 12 மில்லியனாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய உற்பத்திப் பொருளுடன் தொடர்புடைய பின்வரும் தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன :

(1) அடுத்த 5 ஆண்டுகள் ஈறான விற்பனை அலகுகள் கீழ்வருமாறு காணப்படும் :

| ஆண்டு | விற்பனை (அலகுகள்) |
|---|---|
| 1 | 200,000 |
| 2 | 250,000 |
| 3 | 350,000 |
| 4 | 300,000 |
| 5 | 270,000 |

(2) ஒரு இலத்திரனியல் மானியை ரூபா 600/- இற்கு விற்கலாம் என்பதுடன் முதலாவது ஆண்டில் மாறும் உற்பத்திக் கிரயம் அலகொன்றிற்கு ரூபா 430/- ஆக இருக்கும். அதன் பின்னர் விற்பனை விலையும் மாறும் கிரயங்களும் ஆண்டிற்கு 10% என்ற மதிப்பிடப்பட்ட பணவீக்கத்திற்கு ஏற்ப அதிகரிக்கப்படவுள்ளன.

(3) வருடாந்த நிலையான கிரயங்கள் ரூபா 18,000,000/- ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் நேர் கோட்டு அடிப்படையில் விதிக்கப்பட்ட இயந்திரத்தின் தேய்மானம் உள்ளடங்குகிறது.

(4) இயந்திரமானது பயன்தரும் ஆயுட்காலம் ஈறாக கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்படுகிறது. வரி நோக்கத்திற்காக ஆண்டிற்கு 25% இல் மூலதன விடுதொகை கோரப்பட முடியும்.

(5) கம்பனி ஆண்டிற்கு 30% இல் வருமான வரி செலுத்துவதுடன் அது அந்தந்த ஆண்டிலேயே செலுத்தப்பட வேண்டும்.

(6) உற்பத்தியின் முதலாவது ஆண்டின் இறுதியில் செலவு செய்யப்பட வேண்டிய சந்தைப்படுத்தல் செலவினங்கள் ரூபா 8 மில்லியனாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(7) கம்பனியின் மூலதனக் கிரயம் 18% ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) புதிய பொருளின் நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) **கணிக்குக.** (13 புள்ளிகள்)

(b) கம்பனி புதிய பொருளைத் தயாரிப்பதை முன்னெடுக்க வேண்டுமா என்பதை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 09

**வரையறுக்கப்பட்ட பெயார் கம்பனி பொருள் W** ஐ உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் **பொருள் W** இன் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | ரூபா (அலகொன்று) |
|---|---|
| நேர் பொருள் : | |
| **பொருள் A** (2 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூபா 180/-) | 360 |
| **பொருள் B** (1 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூபா 500/-) | 500 |
| நேர் கூலி (10 நிமிடங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 750/-) | 125 |
| மாறும் மேந்தலைக்கள் (மணித்தியாலமொன்றிற்கு ரூபா 300/-) | 50 |
| **மொத்த மாறும் கிரயம்** | **1,035** |
| விற்பனை விலை | 1,200 |
| **பங்களிப்பு** | **165** |

கம்பனி 2024 இறுதிக் காலாண்டுக் காலப்பகுதியில் 600,000 அலகுகளை விற்பனை செய்யப் பாதீடு செய்திருந்தது. (budgeted). மாதமொன்றிற்கான பாதிடப்பட்ட நிலையான மேந்தலை ரூபா 15,000,000/- ஆகும்.

2024 இறுதிக் காலாண்டிற்கான உண்மையான உற்பத்தி / விற்பனைக் கணியம் 645,000 அலகுகளாக இருந்ததுடன் உண்மையான செயலாற்றுகை கீழே தரப்பட்டுள்ளது :

| | ரூபா |
|---|---|
| விற்பனை வருமானம் (645,000 அலகுகள்) | 761,100,000 |
| நேர் பொருள் : | |
| **பொருள் A** (1,235,000 கிலோகிராம்) | 239,590,000 |
| **பொருள் B** (687,000 கிலோகிராம்) | 329,760,000 |
| நேர் கூலிக் கிரயம் (108,400 மணித்தியாலங்கள்) | 78,048,000 |
| மாறும் மேந்தலைகள் | 32,132,800 |
| நிலையான மேந்தலைகள் | 48,325,000 |

2024 டிசெம்பர் 31 இல் முடிவடையும் காலாண்டிற்காக முகாமையினால் கீழ்வரும் முரண்கள் கணிப்பிடப்பட்டுள்ளன :

| | ரூபா | |
|---|---|---|
| மாறும் மேந்தலைச் செலவின முரண் | 212,800 | பாதகமானது |
| மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் | 330,000 | சாதகமானது |
| விற்பனை எல்லை கனவளவு முரண் | 7,425,000 | சாதகமானது |
| நேர் கூலி வீத முரண் | 3,252,000 | சாதகமானது |
| நேர் கூலி வினைத்திறன் முரண் | 675,000 | பாதகமானது |
| நிலையான மேந்தலை செலவின முரண் | 3,325,000 | பாதகமானது |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கீழ்வரும் முரண்களைக் **கணிக்குக** :

(i) விற்பனை விலை முரண். (02 புள்ளிகள்)

(ii) நேர் பொருள் விலை முரண். (02 புள்ளிகள்)

(iii) நேர் பொருள் கலவை முரண். (03 புள்ளிகள்)

(iv) நேர் பொருள் விளைவு முரண். (03 புள்ளிகள்)

(b) உண்மையான பங்களிப்புடன் பாதிடப்பட்ட பங்களிப்பை இணக்கம் செய்வதற்கு, தொழிற்பாட்டுக் கூற்றொன்றைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 10

(A) **வரையறுக்கப்பட்ட டொட் கம்பனி** பல தொடர் செயன்முறைகளைப் பயன்படுத்தி **பொருள் T2** ஐ உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. 2024 டிசெம்பர் மாதத்தில் **செயன்முறை 2** இற்கான உள்ளீடுகள் கீழ்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| **செயன்முறை 1** இலிருந்து மாற்றப்பட்ட உள்ளீடு (40,000 மீற்றர்கள்) | 4,460,000 |
| நேர் கூலி | 1,560,000 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 814,675 |

2024 டிசெம்பர் மாத ஆரம்பத்தில், கீழ்வரும் பூர்த்தி மட்டங்களுடன் 3,200 மீற்றர்கள் ஆரம்ப புத்துருவாகும் வேலைகள் இருப்பில் இருந்தன :

| | |
|---|---|
| மூலப் பொருள் | 100% பூர்த்தி, பெறுமதி ரூபா 506,800/- |
| நேர் கூலி | 80% பூர்த்தி, பெறுமதி ரூபா 87,984/- |
| மாறும் மேந்தலைகள் | 60% பூர்த்தி, பெறுமதி ரூபா 14,021/- |

2024 டிசெம்பர் மாத இறுதியில், கீழ்வரும் பூர்த்தி மட்டங்களுடன் இறுதிப் புத்துருவாகும் வேலைகளாக 4,800 மீற்றர்கள் இருந்தன :

| | |
|---|---|
| மூலப் பொருள் | 100% |
| நேர் கூலி | 65% |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 30% |

2024 டிசெம்பர் மாத இறுதியில், 35,200 மீற்றர்கள் **செயன்முறை 3** இற்கு மாற்றப்பட்டன.

சாதாரண நட்டமானது **செயன்முறை 1** இலிருந்து, உள்ளீடு செய்யப்படும் பொருள்களில் 5% ஆக உள்ளதுடன், சாதாரண நட்டத்தின் ஒழிவுப் பெறுமதி (scrap value) மீற்றரொன்றிற்கு ரூபா 135/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) சமான அலகுகள் கூற்றைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **செயன்முறை 2** கணக்கைத் **தயாரிக்குக.** (08 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட AQS கம்பனி** அதன் உற்பத்திப் பொருள்களை ஐக்கிய இராச்சியத்திற்கு ஏற்மதி செய்வது பற்றி ஆராய்கிறது. அவர்களிடம் 2 தெரிவுகள் காணப்படுகின்றன. அவர்கள் தமது சொந்த வலையமைப்பைப் பயன்படுத்துவதன் மூலமோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர் களைப் பயன்படுத்துவதன் மூலமோ ஐக்கிய இராச்சியத்தில் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய முடியும்.

மேற்கூறிய இரண்டு முறைகளிலும் உயர்ந்த மட்டத்தில் அல்லது தாழ்ந்த மட்டத்தில் விற்பனை வருமானத்தைப் பெறக்கூடிய சாத்தியத்தன்மை பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன .:

*(ரூபா '000)*

| **சொந்த விநியோகம்** | **சாத்தியத்தன்மை** | **ஆண்டு 1** | **ஆண்டு 2** | **ஆண்டு 3** |
|---|---|---|---|---|
| உயர்ந்த மட்டம் | 40% | 15,000 | 80,000 | 150,000 |
| தாழ்ந்த மட்டம் | 60% | 20,000 | 50,000 | 80,000 |
| | | | | |
| **அதிகாரம் அளிக்கப்பட்ட விநியோகத்தர்** | **சாத்தியத்தன்மை** | **ஆண்டு 1** | **ஆண்டு 2** | **ஆண்டு 3** |
| உயர்ந்த மட்டம் | 70% | 30,000 | 100,000 | 200,000 |
| தாழ்ந்த மட்டம் | 30% | 20,000 | 60,000 | 110,000 |

இரண்டு தெரிவுகளின் கீழும், விற்பனைக் கிரயமானது விற்பனைப் பெறுமதியில் 70% ஆக இருக்கும்.

சொந்த விநியோகத்தைப் பயன்படுத்தினால், விநியோகக் கிரயமானது விற்பனைப் பெறுமதியில் 15% ஆக இருக்கின்ற அதேவேளை ரூபா 600,000/- என்ற நிலையான வருடாந்தக் கிரயமும் இருக்கும்.

அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் பயன்படுத்தப்பட்டால், செலுத்தப்பட வேண்டிய விநியோகத்தரின் எல்லை (distributor's margin) அனைத்துக் கிரயங்களையும் உள்ளடக்கிய விற்பனைப் பெறுமதியில் 21% ஆக இருக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**வரையறுக்கப்பட்ட AQS** கம்பனி எந்தத் தெரிவை கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதை **மதிப்பிடுக.**

*(ஆதரவான கணிப்பீடுகளைக் காட்டுக.)* (06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |